NDB வங்கி
எதிர்கால வங்கியியல் முன்னோடி

# NDB சிறுவர் சேமிப்புக் கணக்கு நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

**ஷில்பா சிறுவர் சேமிப்புக் கணக்கு மற்றும் பிரிவிலேஜ் ஜுனியர் சேமிப்புக் கணக்கு நியதிகள் மற்றும் நிபந்தனைகள்**

1. ஷில்பா சிறுவர் சேமிப்புக் கணக்கு (ஷில்பா கணக்கு) மற்றும் பிரிவிலேஜ் ஜுனியர் சேமிப்புக் கணக்கு (PRV ஜுனியர் கணக்கு), தொடக்க வைப்பு, குறைந்தபட்ச மீதி, வட்டி வீதம் மற்றும் கணிப்பீடு செய்யும் முறை மற்றும் ஷில்பா கணக்கு மற்றும் PRV ஜுனியர் கணக்குக்கு வட்டியை வரவுக்கு வைத்தல் ஆகியவற்றுக்கு ஏற்புடையனவான நியதிநிபந்தனைகள் நஷனல் டிலலப்மென்ட் பாங்க் பிஎல்சி இன் தற்போதைய விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைந்தனவாகவிருக்கும். வங்கியானது, வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக கணக்கு வைத்திருப்பவருக்கும் பெற்றோருக்கும் / பாதுகாவலருக்கும் முன்னறிவித்தலை வழங்குவதன் மூலம் வங்கியின் தனித் தற்றுணிபில் காலத்துக்குக் காலம் விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் நியதிநிபந்தனைகளை மாற்றுவதற்கு / திருத்துவதற்கு / மாற்றீடுசெய்வதற்கு உரிமையைக் கொண்டுள்ளது என வாடிக்கையாளர் இத்தால் சம்மதமளித்து ஒப்புக்கொள்கின்றார்.

2. ஒரு நாள் வயதிலிருந்து சட்டப்படியாக வயதுக்கு வரும் (தற்போது 18 வயது) வரையான பராயமடையாதோர் சார்பான கணக்குகள் (கணக்குவைத்திருப்பவர்) பராயமடையாதோருக்கான கணக்குகள் எனக்கருதப்படுதல் வேண்டும்.

3. கணக்கு திறக்கும் நேரத்தில் பராயமடையாதவரின் பிறப்புச் சான்றிதழை சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

4. கணக்குகளானவை கணக்கு வைத்திருப்பவர் சட்டப்படியாக வயதுக்கு வரும் வரை மட்டுமே பேணப்படுதல் வேண்டும்; அந்நேரத்தில் கணக்கானது கணக்கு வைத்திருப்பவரினால் கையொப்பமிடப்படும் புதிய பொறுப்பாணையொன்றின் மீது கணக்கு வைத்திருப்பவரினால் தொழிற்படுத்தப்படும் சாதாரண சேமிப்புக்குக் கணக்குக்கு மாற்றப்படும்.

5. மேலேயுள்ளவை எவ்வாறிருப்பினும், வங்கியானது பெற்றோருடன் / பாதுகாவலருடன் முன்னொழுங்கேற்பாடு செய்துகொள்ளப்படுவதன் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட பணத்தொகையொன்றை மீளப்பெறுவதற்கு 16 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதைக்கொண்ட பராயமடையாத ஒருவருக்கு வங்கி அனுமதிக்கலாம்.

6. மேலே வாசகம் 4 இற்கு அமைய, பெற்றோர் / பாதுகாவலரின் வெளிப்படையான அங்கீகாரத்துடன், காலத்துக்குக்காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு வரையறுக்கப்பட்ட தொழிற்பாடுகளுக்காக வங்கியின் தன்னியக்க காசாள் பொறி (ATM) வலையமைப்பைப் பயன்படுத்துவதற்கு பராயமடையாதோர் அனுமதிக்கப்படலாம்.

7. வருமான வரிக்கு ஆளான பெற்றோர் / பாதுகாவலர், சிறுவர் சேமிப்புக் கணக்கு பொறுப்பாணைப் படிவத்தில் (பொறுப்பாணை) தமது வரிக் கோப்பு இலக்கங்களை வெளிப்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றார். ஈட்டப்பட்ட வட்டி வரிசெலுத்தப்படற்பாலதான எல்லையினுள் வந்தால், அது வரிகளுக்கு உட்படலாம்.

8. கணக்கு வைத்திருப்பவர் இறக்கின்ற பட்சத்தில், கணக்கில் உள்ள பணங்கள் இலங்கைச் சட்டங்களுக்கு இணங்க விடுவிக்கப்படும்.

9. கணக்கு வைத்திருப்பவர் சார்பாக வரையப்படும் காசோலைகள், பணக் கட்டளைகள் முதலியன வங்கியின் தற்றுணிபில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

10. பெற்றோர் / பாதுகாவலர் மாதாந்த வாக்குறுதித் தொகையை கணக்கில் வைப்பிலிடுவதற்கு தெரிவுசெய்கின்ற பட்சத்தில், கணக்கு வைத்திருப்பவர் மேலதிக வட்டிக் கொடுப்பனவொன்றுக்கு உரித்துடையவராதல் வெண்டும். குறைந்தபட்ச வாக்குறுதித் தொகையானது காலத்துக்குக்காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படும் தொகையொன்றாகவிருத்தல் வேண்டும்.

11. கணக்கு வைத்திருப்பவர் / பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒவ்வொரு மாதமும் வாக்குறுதித் தொகையை கணக்கில் வைப்பிலிடுவதன் மேல், வங்கியானது அடுத்துவரும் மாதத்தின் தொடக்கத்தில் கணக்கின் மீது பெறப்படத்தக்கதான வட்டியின் மேலதிக வட்டிக் கொடுப்பனவொன்றை கணக்கு வைத்திருப்பவருக்கு செலுத்துதல் வேண்டும்.

12. கணக்கு வைத்திருப்பவர் அல்லது பெற்றோர் அல்லது பாதுகாவலர் குறிப்பிட்ட மாதமொன்றில் வாக்குறுதித் தொகையை கணக்கில் வைப்பிலிடாத பட்சத்தில், கணக்கு வைத்திருப்பவர் அம்மாதத்துக்கு பெறப்படத்தக்கதான மேலதிக வட்டிக்கொடுப்பனவை இழப்பித்தல் வேண்டும்.

13. கணக்குக்கான பண வைப்புக்கள், கணக்கு எங்கு திறக்கப்பட்டது என்பதனைப் பொருட்படுத்தாமல் வங்கியின் ஏதேனும் கிளையில் செய்யப்படலாம்.

14. கணக்கு எதுவும் பராயமடையாதவரின் கூட்டுப் பெயர்களில் திறக்கப்படுதலாகாது.

15. ஒவ்வொரு பெற்றோர் / பாதுகாவலருக்கும் பணவைப்புப் புத்தகமொன்று வழங்கப்படும்; அதன் பாதுகாப்பு பெற்றோர் / பாதுகாவலரின் பொறுப்பாகும். பண வைப்புப் புத்தகம் காணாமல் போனால், திருடப்பட்டால் அல்லது இடம்தவறி வைக்கப்பட்டால் அது பற்றி வங்கிக்கு உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

16. பெற்றோர் / பாதுகாவலர் பண வைப்புப் புத்தகத்தை கிரமமாக இற்றைப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் வங்கியை விட்டுச்செல்வதற்கு முன்னர், எல்லா வைப்புக்களும், வட்டியும் கணக்கு வைத்திருப்பவரின் திருப்திக்கு செம்மையாக பதியப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துதலும் வேண்டும். வங்கியானது, கணினி மூலம் அச்சிடப்படாத அல்லது வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் கையொப்பத்தின் கீழ் பதியப்படாத எவையேனும் பதிவேடுகளுக்கு எத்தகையதுமான ஏதேனும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது.

17. வங்கியானது அதன் தனித்தற்றுணிபில் கணக்கு வைத்திருப்பவர்களுக்கான பரிசுத் திட்டமொன்றை வழங்கலாம்.

18. வங்கியானது, சந்தை நிலைமைகளைப் பொறுத்து பரிசுத் திட்டத்தை மாற்றுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது என்பதுடன் அத்தகைய மாற்றங்கள் வங்கியின் இணையத்தளத்தில் கிடைக்கக்கூடியதாக்கப்படும் அத்துடன் வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் அதன் கிளையின் வளவுகளில் வெளிக்காட்டி வைக்கப்படும்.

19. பரிசு / பரிசுகளை பெற்றுக்கொள்வதற்கென, கணக்கு வைத்திருப்பவர் வங்கியின் பரிசு பற்றிய சிற்றேட்டில் குறிப்பிடப்பட்டவாறு பரிசு / பரிசுகளை உரிமைகோரும் நேரத்தில் வங்கியினால் நிர்ணயிக்கப்படும் தேவைப்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

20. ஏற்புடையதான பரிசுகளை உரிமைகோரும் போது கணக்கு வைத்திருக்கும் கிளைக்கு பண வைப்புப் புத்தகம் வழங்கப்படுதல் வேண்டும்.

21. வங்கியானது, பணவைப்புப் புத்தகமொன்று காணாமல் போகின்ற விடயத்தில் செல்லுபடியான சத்தியக்கடதாசி மற்றும் நட்டோத்தரவாதத்துடன் சேர்த்து பெற்றோர் அல்லது பாதுகாவலரினால் வழங்கப்படும் விதிவிலக்கான விளக்கமொன்றை ஏற்றுக்கொள்வதன் மேல் புதிய பண வைப்புப் புத்தகமொன்றை வழங்கலாம்.

22. பணவைப்புப் புத்தகம் காணாமல் போகின்ற பட்சத்தில், தற்போதைய மீதி வரையிலான எல்லாப் பரிசு உரித்துடைமைகளும் கணக்கு வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதனை வங்கி கவனத்திற்கொள்ளும்.

23. NDB ஷில்பா கணக்கு அல்லது பிரிவிலேஜ் ஜுனியர் கணக்கொன்று, பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கோரிக்கையின் பேரில் விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழ் கணக்கு வைத்திருப்பவர் 18 வயதை அடைவதற்கு முன்னர் மூடப்படுகின்ற பட்சத்தில், வங்கியானது கிடைக்கக்கூடியதாகவுள்ள மீதியிலிருந்து வழங்கப்பட்ட பரிசுகளின் ஆகுசெலவுகளை அறவிடுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

24. NDB ஷில்பா கணக்கு அல்லது பிரிவிலேஜ் ஜுனியர் கணக்குக்கு இணைக்கப்படும் எவையேனும் காப்புறுதி நன்மைகள் நிலவுகின்ற காப்புறுதிச் சட்டங்கள் மற்றும் செயன்முறைகளுக்கும் முறையான காப்புறுதிக் கம்பெனியினால் விதிக்கப்படும் அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கும் அமைந்தனவாகவிருக்கும்.

25. இந்நியதிநிபந்தனைகள், இலங்கையின் நிலவுகின்ற சட்டங்களினால் ஆளப்படுதல் வேண்டுமென்பதுடன் அவற்றுக்கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலும்
வேண்டும். சிறுவர் சேமிப்புக் கணக்கு திறத்தல் பொறுப்பாணையில் பெயரிடப்பட்ட கணக்கு வைத்திருப்பவர்கள் / பெற்றோர் / பாதுகாவலர்கள் இலங்கையின் குடியியல் நீதிமன்றங்களின் பிரத்தியேகமற்ற நியாயாதிக்கங்களுக்கு இல்லாதொழிக்க முடியாத வகையில் கீழ்ப்படிகின்றனர்.

26. ஏற்புடையதான ஒழுங்குவிதிகளுக்கமைய, வங்கியானது அதற்காக கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து (கணக்கு வைத்திருப்பவர்களிடமிருந்து) அத்துடன் / அல்லது பெற்றோர் / பாதுகாவலரிடமிருந்து முன்னங்கீகாரத்தைப் பெறாமல் இதன்கீழான அதன் உரிமைகளுள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் இன்னொரு திறத்தவருக்குக் குறித்தளிப்பதற்கு உரிமையைக் கொண்டிருத்தல் வேணடும்.

27. கணக்கு வைத்திருப்பவர் பெரும்பாண்மை வயதை அடைவதன் மேல், வங்கி திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை வழங்கியதன் பின்னர் மீதியை அவர் உரிமைகோருதல் வேண்டும். அத்தகைய மீதி உரிமை கோரப்படாதவிடத்து, கணக்கானது பயனுகரியின் பெயரில் சாதாரண சேமிப்புக் கணக்கொன்றுக்கு மாற்றப்படும். அத்தகைய மாற்றப்பட்ட கணக்குகள் சாதாரண சேமிப்புக் கணக்குக்கு ஏற்புடையதாகும் விதிகளினால் ஆளப்படும்.

28. வரைவிலக்கணங்கள்

    (i) “கணக்கு” என்பது, ஒன்றில் தனியாக அல்லது கூட்டாக ஷில்பா சிறுவர் சேமிப்புக் கணக்கு மற்றும் பிரிவிலேஜ் ஜுனியர் சேமிப்புக் கணக்கு எனப் பொருள்படுதல் வேண்டும்.

    (ii) “கணக்கு வைத்திருப்பவர்” என்பது, கணக்கொன்றைத் திறப்பதற்கு தகவுடையவராகவுள்ள 1 நாளிலிருந்து 18 வயது வரையான பராயமடையாதவர் எனப் பொருள்படுதல் வேண்டும்.

    (iii) “வங்கி” என்பது, நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி, அதன் அடுத்துறுநர்கள் மற்றும் சாட்டுநர்கள் எனப் பொருள்படுதல் வேண்டும்.

    (iv) “பொறுப்பாணை” என்பது, சிறுவர் சேமிப்புக் கணக்கு திறத்தல் பொறுப்பாணைப் படிவம் எனப் பொருள்படுதல் வேண்டும்.

29. கணக்குகள் மீதான வட்டி நாளாந்த மீதியின் மீது கணக்கிடப்பட்டு மாதாந்தம் வரவு வைக்கப்படும் ஆயின், அக்கணக்கு (கணக்குகள்) அத்தகைய ஒவ்வொரு கணக்கீட்டு நாளன்றும் தேவைப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச மீதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

30. மேலேயுள்ள நோக்கத்துக்கான வட்டி வீதங்களும் வருடாந்த பயனுறு வீதமும் (AER) வங்கியின் இணையத்தளத்தில் வெளியிடப்படும் என்பதுடன் எவையேனும் மாற்றங்கள் காலத்துக்குக் காலம் இற்றைப்படுத்தவும்படும்.

31. கணக்குக்கு ஏற்புடையதான தொடக்க வைப்பு, குறைந்தபட்ச மீதித் தேவைப்பாடு மற்றும் எவையேனும் விதிப்பனவுகள் அல்லது கட்டணங்கள் வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

32. கணக்கானது, நிலவுகின்ற இலங்கை மத்திய வங்கியின் (CBSL) பணப்புரைகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் படி காப்புறுதித் திட்டமொன்றை வைப்பிலிடுவதற்கு தகவுடையதாகவிருக்கும்.

33. வாய்மொழி மூலம் அல்லது எழுத்தில் வங்கிக்கு அல்லது மிகக்கிட்டியதாகவுள்ள கிளைக்கு அல்லது வங்கியின் அழைப்பு மையத்துக்கு அல்லது தலைமையலுவலகத்துக்கு, வங்கியின்

உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக அல்லது அதன்கண் வழங்கப்பட்ட நடவடிக்கைமுறையின்படி வங்கியின் ஏதேனும் உத்தியோகபூர்வ வெளியீட்டின் அல்லது அறிவித்தலின் ஊடாக வெளியிடப்பட்டவாறு கணக்குவைத்திருப்பவர்
வங்கிக்கு ஏதேனும் முறைப்பாட்டைச் செய்வதற்கு உரிமையுடையவராதல் வேண்டும். முறைப்பாடொன்று தீர்த்துவைக்கப்படாதவிடத்து, கணக்கு வைத்திருப்பவர் நிதி குறைகேள் அதிகாரி அல்லது இலங்கை மத்திய வங்கி ஊடாகத் தீர்வை நாடலாம்.

34. வங்கியானது எவையேனும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களையும் தொடக்க நிலைக்கு மேலான கொடுக்கல்வாங்கல்களையும் இயைபான அதிகாரிக்கு அறிக்கையிடுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

35. (வரையறையின்றி) வாடிக்கையாளர் ஒருவர், வங்கியில் வைத்திருக்கப்படும் கணக்கு அல்லது வங்கியுடனான வாடிக்கையாளர் / வாடிக்கையாளர்கள் தொடர்பு பற்றிய தகவல்கள் உட்பட கணக்கு சம்பந்தமான எவையேனும் தகவல்களை ஏதேனும் நோக்கத்துக்காக பின்வருபவர்களுள் எவருக்கும் வெளிவிடுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது என கணக்கு வைத்திருப்பவர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர் இத்தால் சம்மதமளிக்கின்றனர்.

    (i) என்னைக் குறிப்பீடு செய்யாது, கணக்கு (கணக்குகள்) சம்பந்தமாக வேறு எவரேனும் வங்கியாளர்கள், கடன் தகவற் பணியகம் அல்லது வேறு எவரேனும் அதிகாரி அல்லது எவரேனும் சட்டரீதியாக அதிகாரமளிக்கப்பட்ட திறத்தவர். ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அத்தகைய ஏதேனும் பதில் ஒரு வங்கிக் குறிப்பீட்டை உள்ளடக்கலாம்;

    (ii) அத்தகைய வெளிவிடுகையைச் செய்வதற்கு சட்டத்தினால் அல்லது நீதிமன்றக் கட்டளையினால் எந்த ஆளுக்குச் செய்வதற்கு வங்கி தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் ஆள்;

    (iii) வங்கிக்கு அந்தரங்கத்தன்மைக் கடப்பாட்டின் கீழ் உள்ள எவரேனும் ஆள்.

36. வங்கியானது பின்வருவோரிடமிருந்து பெறப்படும் எவையேனும் மற்றும் எல்லா விசாரணைகளையும் அவ்வாறு தெரிவுசெய்தால், அவற்றுக்குப் பதிலளிப்பதற்கு வங்கிக்கு அதிகாரமளிக்கின்றேன்;

    (i) என்னைக் குறிப்பீடு செய்யாது, கணக்கு (கணக்குகள்) சம்பந்தமாக வேறு எவரேனும் வங்கியாளர்கள், கடன் தகவற் பணியகம் அல்லது வேறு எவரேனும் அதிகாரி. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அத்தகைய ஏதேனும் பதில் ஒரு வங்கிக் குறிப்பீட்டை உள்ளடக்கலாம்;

    (ii) எனது கணக்கு (கணக்குகள்) / வசதிகள் தொடர்பாக வங்கியின் எவையேனும் உரிமைகள் அல்லது கடப்பாடுகள் சம்பந்தமாக எவரேனும் உள்ளபடியான அல்லது நிகழ்தகு சாட்டுநர், பங்குபற்றுநர் அல்லது ஒப்பந்தரீதியிலான திறத்தவர்.

37. நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி (NDB வங்கி) இற்கு வழங்கப்பட்ட வங்கித்தொழில் உரிமம் இலங்கை மத்திய வங்கியினால் இரத்துச் செய்யப்படுகின்ற பட்சத்தில், காலத்துக்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அதிகபட்ச தொகை வரை தகைமையுடைய வைப்பாளர்களுக்கு நட்டஈடளிப்பதற்கென, இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) வழங்கப்பட்ட நடைமுறையில் உள்ள பணிப்புக்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் படி இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் எல்லாத் தகைமைகொண்ட வைப்புக்களும் காப்புறுதிசெய்யப்படுகின்றன.

38. ஷில்பா கணக்கு மற்றும் பிரிவிலேஜ் ஜூனியர் கணக்கின் நியதிநிபந்தனைகள் மற்றும் விபரங்களை நான் / நாம் பெற்று, வங்கியினால் அவை பற்றி எனக்கு / எமக்கு விளங்கப்படுத்தப்பட்டு அவற்றை விளங்கிக்கொண்டேன் / விளங்கிக் கொண்டோம் என்பதுடன் அவற்றை ஏற்றுக்கொள்ளும் வகையில் நான் / நாம் இத்தால் எனது / எமது கையொப்பத்தை / கையொப்பங்களை இடுகின்றேன் / இடுகின்றோம்.

**Neos பிக்சல் டிஜிட்டல் வங்கிக் கணக்கு**

1. 13 வயதுக்கும் 18 வயதுக்கும் இடையில் (பராயமடையாதவர்) உள்ள இலங்கைப் பிரசையாகவுள்ளவரும் அவரது பெற்றோர் / பாதுகாவலர் நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி (வங்கி) இன் வாடிக்கையாளராகவுள்ளவருமான (பெற்றோர் / பாதுகாவலர்) பராயமடையாதவர் ஒருவர் Neos பிக்சல் டிஜிட்டல் வங்கிக் கணக்கொன்றை (கணக்கு) திறப்பதற்கு தகவுடையவராதல் வேண்டும்.

2. வங்கியானது, வங்கியின் கூட்டாண்மை நிறுவன இணையத்தளம், அத்துடன் / அல்லது அழைப்பு மையம் அத்துடன் / அல்லது வங்கி வலையமைப்பினூடாக கணக்கொன்றைத் திறந்துள்ள பராயமடையாதவருக்குக் கிடைக்கக்கூடியதாகவிருக்கவேண்டிய குறைந்தபட்ச வைப்பீட்டுப் பெறுமதியை காலத்துக்குக் காலம் விதித்தல் வேண்டும்.

3. நிழற்படப் பிரதியொன்றுடன் சேர்த்து பராயமடையாதவரின் பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் பெற்றோர் / பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டின் மூலப் பிரதி கணக்கு திறக்கும் நேரத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

4. பராயமடையாதவர், கணக்கைத் திறந்ததன் மேல், பதிவுக்கட்டளை விதிகளாக கணக்கு இலக்கம், சட்டரீதியான ID இலக்கம் மற்றும் பிறந்த திகதி என்பவற்றைப் பயன்படுத்தி NDB Neos மொபைல் பேங்கிங் செயலிக்கு (NDB Neos) பதிவுசெய்வதற்கு தகவுடையவராதல் வேண்டும் என பெற்றோர் / பாதுகாவலர் ஒப்புக்கொள்கின்றனர்.

5. NDB Neos மீதான பதிவுச் செயன்முறையின் போது, NDB Neos மீது NDB Neos பயனர்களுக்கு ஏற்புடையனவான பொதுவான நியதி நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கு பராயமடையாதவர் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும் என பெற்றோர் / பாதுகாவலர் ஒப்புக்கொள்கின்றனர். NDB Neos மீது பராயமடையாதவரினால் Neos மொபைல் பேங்கிங் நியதி நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதானது, பெற்றோர் / பாதுகாவலர் சொல்லப்பட்ட Neos மொபைல் பேங்கிங் நியதி நிபந்தனைகளினால் பிணிக்கப்படுகின்றவிடத்து பெற்றோர் / பாதுகாவலரினால் அவை ஏற்றுக்கொள்ளப்படுவதாக கருதப்படுதல் வேண்டும்.

6. கணக்கு மற்றும் NDB Neos இனைப் பயன்படுத்தி பராயமடையாதவரினால் நிறைவேற்றப்படும் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் தொழிற்பாடுகளுக்கு பெற்றோர் / பாதுகாவலர் வகைகூறக்கூடியவர்களாதலும் பொறுப்பாதலும் வேண்டும்.

7. கணக்குக்கான அணுகுகை NDB Neos ஊடாக எண்ணிமரீதியில் அத்துடன் / அல்லது கணக்கு வைத்திருப்பவருக்கு வழங்கப்படும் டெபிட் அட்டை மூலம் வழங்கப்படும். கருமபீடத்தினூடான மீளப்பெறுகைகள் இக்கணக்குக்கு சாத்தியமாகவிருத்தலாகாது.

8. பண வைப்புப் புத்தகமெதுவும் வழங்கப்படுதலாகாது. இக்கணக்குக்கு அச்சிடப்பட்ட வங்கிக் கூற்றுக்கள் கிடைக்கக்கூடியதாக்கப்படுதலாகாது. காலாகால இலத்திரனியல் வங்கிக் கூற்றுக்கள் மற்றும் எஸ்எம்எஸ் மூலமான விழிப்பூட்டல்கள் கணக்கு திறக்கும் நேரத்தில் வழங்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிகளுக்கும் கையடக்கத் தொலைபேசி இலக்கங்களுக்கும் அனுப்பப்படுதல் வேண்டும். வங்கியின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் கிடைக்கக்கூடியதாகவுள்ள வங்கியின் இலத்திரனியல் வங்கிக்கூற்று மற்றும் எஸ்எம்எஸ் மூலமான விழிப்பூட்டல்களுக்கு ஏற்புடையனவான குறிப்பிட்ட நியதி நிபந்தனைகளினால் பராயமடையாதவர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர் பிணிக்கப்படுதல் வேண்டும்.

9. வட்டியானது நாளாந்த மீதியின் மீது கணக்கிடப்பட்டு மாதாந்தம் வரவு வைக்கப்படும்.

10. காசோலைகள் அல்லது வேறு எவையேனும் வைப்புக்கள் இக்கணக்கின் வரவுக்கு வங்கியின் தற்றுணிபில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

11. கணக்கு மீதான கடன்கள் வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு அதிகபட்ச எல்லையொன்றுக்கு அமைய, நிறைவேற்றப்பட முடியும்.

12. வங்கியானது NDB Neos அத்துடன் / அல்லது இக்கணக்குக்கு வழங்கப்பட்ட டெபிட் அட்டை மூலம் கணக்கைத் தொழிற்படுத்துவதற்கு மறுபக்கத்தில் பெயரிடப்பட்ட பராயமடையாதவரை அனுமதிப்பதன் விளைவாக எழுகின்ற எவ்வகையினதுமான ஏதேனும் இழப்பு அல்லது சேதத்துக்கு எத்தகையதுமான ஏதேனும் வழியில் வங்கியை உட்படுத்துவதாக, பொறுப்பாக்குவதாக அல்லது வகைகூறுவதாக பெற்றோர் / பாதுகாவலர் வைத்திருக்க முடியாது என அவர் / அவள் இத்தால் ஒப்புக்கொள்கின்றார்.

13. பராயமடையாதவர் 18 வயதை அடையும்போது, பராயமடையாதவர் கணக்கை வழமையான NDB கணக்குக்கு மாற்றுவதற்கான தற்றுணிபைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நிதிகள் புதிய கணக்குக்கு கைமாற்றப்படும்.

14. Neos பிக்சல் டிஜிட்டல் வங்கிக் கணக்கு,
தொடக்க வைப்பு, குறைந்தபட்ச மீதி, வட்டி வீதம் மற்றும் கணிப்பீடு செய்யும் முறை மற்றும் Neos பிக்சல் டிஜிட்டல் வங்கிக் கணக்குக்கு வட்டியை வரவுக்கு வைத்தல் ஆகியவற்றுக்கு ஏற்புடையனவான நியதி நிபந்தனைகள் நஷனல் டிலலப்மென்ட் பாங்க் பிஎல்சி இன் தற்போதைய விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைந்தனவாகவிருக்கும். வங்கியானது, வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக கணக்கு வைத்திருப்பவருக்கும் பெற்றோருக்கும் / பாதுகாவலருக்கும் முன்னறிவித்தலை வழங்குவதன் மூலம் வங்கியின் தனித் தற்றுணிபில் காலத்துக்குக் காலம் விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் நியதி நிபந்தனைகளை மாற்றுவதற்கு / திருத்துவதற்கு / மாற்றீடுசெய்வதற்கு உரிமையைக் கொண்டுள்ளது என வாடிக்கையாளர் இத்தால் சம்மதமளித்து ஒப்புக்கொள்கின்றார்.

15. ஏற்புடையதான ஒழுங்குவிதிகளுக்கமைய, வங்கியானது அதற்காக கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து (கணக்கு வைத்திருப்பவர்களிடமிருந்து) அத்துடன் / அல்லது பெற்றோர் / பாதுகாவலரிடமிருந்து முன்னங்கீகாரத்தைப் பெறாமல் இதன்கீழான அதன் உரிமைகளுள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும் இன்னொரு திறத்தவருக்குக் குறித்தளிப்பதற்கு உரிமையைக் கொண்டிருத்தல் வேணடும்.

16. வாய்மொழி மூலம் அல்லது எழுத்தில் வங்கிக்கு அல்லது மிகக்கிட்டியதாகவுள்ள கிளைக்கு அல்லது வங்கியின் அழைப்பு மையத்துக்கு அல்லது தலைமையலுவலகத்துக்கு, வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக அல்லது அதன்கண் வழங்கப்பட்ட நடவடிக்கைமுறையின்படி வங்கியின் ஏதேனும் உத்தியோகபூர்வ வெளியீட்டின் அல்லது அறிவித்தலின் ஊடாக வெளியிடப்பட்டவாறு கணக்குவைத்திருப்பவர்
வங்கிக்கு ஏதேனும் முறைப்பாட்டைச் செய்வதற்கு உரிமையுடையவராதல் வேண்டும். முறைப்பாடொன்று தீர்த்துவைக்கப்படாதவிடத்து, கணக்கு வைத்திருப்பவர் நிதி குறைகேள் அதிகாரி அல்லது இலங்கை மத்திய வங்கி ஊடாகத் தீர்வை நாடலாம்.

17. வங்கியானது பின்வருவோரிடமிருந்து பெறப்படும் எவையேனும் மற்றும் எல்லா விசாரணைகளையும் அவ்வாறு தெரிவுசெய்தால், அவற்றுக்குப் பதிலளிப்பதற்கு வங்கிக்கு அதிகாரமளிக்கின்றேன்;

    (i) என்னைக் குறிப்பீடு செய்யாது, கணக்கு (கணக்குகள்) சம்பந்தமாக வேறு எவரேனும் வங்கியாளர்கள், கடன் தகவற் பணியகம் அல்லது வேறு எவரேனும் அதிகாரி அல்லது எவரேனும் சட்டரீதியாக அதிகாரமளிக்கப்பட்ட திறத்தவர். ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அத்தகைய ஏதேனும் பதில் ஒரு வங்கிக் குறிப்பீட்டை உள்ளடக்கலாம்;

    (ii) எனது கணக்கு (கணக்குகள்) / வசதிகள் தொடர்பாக வங்கியின் எவையேனும் உரிமைகள் அல்லது கடப்பாடுகள் சம்பந்தமாக எவரேனும் உள்ளபடியான அல்லது நிகழ்தகு சாட்டுநர், பங்குபற்றுநர் அல்லது ஒப்பந்தரீதியிலான திறத்தவர்.

18. மேலேயுள்ள நோக்கத்துக்கான வட்டி வீதங்களும் வருடாந்த பயனுறு வீதமும் (AER) வங்கியின் இணையத்தளத்தில் வெளியிடப்படும் என்பதுடன் எவையேனும் மாற்றங்கள் காலத்துக்குக் காலம் இற்றைப்படுத்தவும்படும்.

19. இவ்விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கம் அதிகாரமளிக்கப்பட்ட எஸ்எம்எஸ் பெறுநரின் (பெற்றோர் / பாதுகாவலர்) கீழ் பதிவுசெய்யப்படுகின்றது என நான் / நாம் உடன்பட்டு சான்றுப்படுத்துகின்றேன் / சான்றுப்படுத்துகின்றோம்.

20. இந்நியதிநிபந்தனைகளில் ஒருமைக்கான குறிப்பீடு பன்மையையும் மறுதலையாகவும் உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன், ஆண்பாலைக் குறிக்கும் சொற்கள் பெண்பாலை உள்ளடக்குதலும் வேண்டும்.

21. நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி (NDB வங்கி) இற்கு வழங்கப்பட்ட வங்கித்தொழில் உரிமம் இலங்கை மத்திய வங்கியினால் இரத்துச் செய்யப்படுகின்ற பட்சத்தில், காலத்துக்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அதிகபட்ச தொகை வரை தகைமையுடைய வைப்பாளர்களுக்கு நட்டஈடளிப்பதற்கென, இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) வழங்கப்பட்ட நடைமுறையில் உள்ள பணிப்புக்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் படி இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் எல்லாத் தகைமைகொண்ட வைப்புக்களும் காப்புறுதிசெய்யப்படுகின்றன.

22. வங்கியானது எவையேனும் சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களையும் தொடக்க நிலைக்கு மேலான கொடுக்கல்வாங்கல்களையும் இயைபான அதிகாரிக்கு அறிக்கையிடுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

**Neos பிக்சல் டெபிட் அட்டை**

1. இந்நியதி நிபந்தனைகளில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலொழிய,

(அ) “கணக்கு” என்பது, பெற்றோர் / பாதுகாவலர் (பெற்றோர் / பாதுகாவலர்) ஒருவருடன் சேர்த்து தாபிக்கப்பட்டு அட்டை வைத்திருப்பவரின் பெயரில் வங்கியில் வைத்திருக்கப்படும் அல்லது வைத்திருக்கப்படவேண்டிய கணக்கு அல்லது கணக்குகள் எனப் பொருள்படும்; அவற்றின் எண்ணிக்கை பிக்சல் டெபிட் அட்டைக்கான விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்டு தோதானவாறு அட்டை வைத்திருப்பவருக்கு அறிவிக்கப்படும் அல்லது அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) “வங்கி” என்பது, அதன் வியாபாரப் பெயரினால் “NDB வங்கி” என அறியப்படுவதும் கொழும்பு 02, நவம் மாவத்தை, இல. 40 இல் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதுமான நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி எனப் பொருள்படுதல் வேண்டும்; அப்பதம் அதன் அடுத்துறுநர்கள் மற்றும் சாட்டுநர்களை உள்ளடக்குதல் வேண்டும்.

(இ) “அட்டை வைத்திருப்பவர்” என்பது, இந்நியதிநிபந்தனைகளுக்கிணங்க கணக்கைத் தொழிற்படுத்துவதற்கு அதிகாரமுள்ள 13 இலிருந்து 18 வயது வரையான பராயமடையாதவொருவர் எனப் பொருள்படுதல் வேணடும்.

(ஈ) “வசதி” என்பது, விசா அட்டை மூலமான கொடுக்கல்வாங்கல்கள், இணைய வழிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களும் எனப் பொருள்படுதல் வேணடும்.

(உ) “பிக்சல் டெபிட் அட்டை” என்பது, ஏதேனும் புதுப்பித்தல் அல்லது மாற்றீட்டு அட்டை உட்பட POS மற்றும் இணையவழியில் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கு பெற்றோர் / பாதுகாவலரின் கோரிக்கையின் பேரில் அட்டை வைத்திருப்பவருக்கு வங்கியினால் வழங்கப்பட்ட விசா அட்டை அல்லது வேறொரு வியாபாரப் பெயரின் கீழான வேறேதேனும் அட்டை எனப் பொருள்படுதல் வேணடும்.

(ஊ) “PIN” என்பது, பிக்சல் டெபிட் அட்டையை வழங்கும் போது அட்டை வைத்திருப்பவருக்கு வங்கியினால் வழங்கப்பட்ட தனிநபர் ஆளடையாள இலக்கம் அல்லது பிக்சல் டெபிட் அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாகத் தன்னை ஆளடையாளங் காண்பதற்கு வங்கியுடன் ஒழுங்கேற்பாடு செய்யப்பட்டவாறு அட்டை வைத்திருப்பவரினால் அடுத்துப்பின்னர் பதிலீடு செய்யப்பட்ட இலக்கம் எனப் பொருள்படுதல் வேணடும்.

(எ) “ P O S ” என்பது, பிக்சல் டெபிட் அட்டையை ஏற்றுக்கொள்ளும் இலங்கையில் உள்ள வணிகர்களிடம் கிடைக்கக்கூடியனவாகவுள்ள விற்பனையிட முடிவிடங்கள் எனப் பொருள்படுதல் வேணடும்.

(ஏ) “கொடுக்கல்வாங்கல் / கொடுக்கல் வாங்கல்கள்” என்பது, விற்பனையிட முடிவிடத்தினூடாக (POS) அல்லது இணைய வழித் தளங்களினூடாக செய்முறைப்படுத்துவதற்கு இயன்றனவாகவுள்ள எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் எனப் பொருள்படுதல் வேணடும்.

2. இந்நியதிநிபந்தனைகளில் ஒருமைக்கான குறிப்பீடு பன்மையையும் மறுதலையாகவும் உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன், ஆண்பாலைக் குறிக்கும் சொற்கள் பெண்பாலை உள்ளடக்குதலும் வேண்டும்.

3. பிக்சல் டெபிட் அட்டையின் வழங்குகையானது பெற்றோர் / பாதுகாவலரினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் அத்தகைய பெற்றோர் / பாதுகாவலர் அட்டை வைத்திருப்பவருடன் சேர்த்து இதன்கண் அடங்கியுள்ள நியதிநிபந்தனைகளினால் எல்லா நேரங்களிலும் பிணிக்கப்படுதல் வேண்டும். பிக்சல் டெபிட் அட்டையின் பயன்பாட்டின் மீது வங்கியினால் விதிக்கப்படும் நியதிநிபந்தனைகள் தவிர, அட்டை வைத்திருப்பவர் பிக்சல் டெபிட் அட்டையின் பயன்பாட்டின் மீது விசா / மாஸ்டர் இன்டர்நஷனல் அட்டை ஆகிய இரண்டினாலும் விதிக்கப்படும் விதிகளினாலும் ஒழுங்குவிதிகளினாலும் ஆளப்படுதல் வேண்டும்.

4. விற்பனை உறுதிச்சீட்டில் கையொப்பமிடுவதன் மூலம் அத்துடன் / அல்லது பிக்சல் டெபிட் அட்டையின் மீது அச்சிடப்பட்ட இலக்கத்தைக் குறிப்பதன் மூலம், பிக்சல் டெபிட் அட்டையை ஏற்றுக்கொள்ளும் இலங்கையில் சில்லறை விற்பனையாளர்களிடம் அல்லது வழங்குநர்களிடம் அட்டை தொழிற்படுத்தல் பொறியொன்றைப் பயன்படுத்துவதன் மூலம் வங்கியினால் அனுமதிக்கப்படுகின்ற பண்டங்களுக்காக அல்லது சேவைகளுக்காகச் செலுத்துவதற்கு அட்டை வைத்திருப்பவர் பிக்சல் டெபிட் அட்டையைப் பயன்படுத்தலாம். அத்தகைய கொடுக்கல்வாங்கல் ஏற்றுக்கொள்ளப்படுவதன் மேல் அல்லது சேவை பயன்படுத்தப்படுவதன் மேல், வங்கியானது அத்தகைய கொடுக்கல்வாங்கல் பெறுமதியை, கணக்குக்குப் பற்று வைத்தல் வேண்டும்.

5. அட்டையை பயன்படுத்தும் நோக்கத்துக்காக PIN பயன்படுத்தப்படுவதுடன், அந்நோக்கத்துக்காகப் பதிலீடு செய்யப்பட்ட ஏதேனும் இலக்கம் (இலக்கங்கள்) கண்டிப்பாக அந்தரங்க மானவையாகவுமுள்ளன. எச்சூழ்நிலைகளின் கீழும் தன்னிச்சையாகவும் அல்லது வேறு வகையிலும் எவ்வழிவகைகள் மூலமும் PIN எவரேனும் மூன்றாந் திறத்தவருக்கு வெளிவிடப்படுதலாகாது. பிக்சல் டெபிட் அட்டையைப் பயன்படுத்துவதற்கு மூன்றாந் திறத்தவரை இயலச்செய்யக்கூடிய ஏதேனும் இடத்தில் அல்லது முறையில் PIN இன் ஏதேனும் எழுத்திலான பதிவை அட்டைவைத்திருப்பவர் பேணுதலாகாது.

6. அட்டை வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட பிக்சல் டெபிட் அட்டையும் PIN னும் கைமாற்றப்படத்தக்கனவல்ல மற்றும் அவரது பிரத்தியேக பயன்பாட்டுக்கு மட்டுமேயாகும். அட்டை வைத்திருப்பவர், PIN ஐக் கண்டிப்பாக அந்தரங்கமானதாக வைத்திருப்பதற்குப் பொறுப்பாவார்.

7. அட்டைவைத்திருப்பவரின் அறிவுடன் அல்லது அதிகாரத்துடன் அல்லது அதுவில்லாமல் பிக்சல் டெபிட் அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் செய்யப்பட்ட எவையேனும் கைமாற்றல்களின்/ கொடுப்பனவுகளின் தொகையை அட்டைவைத்திருப்பவரின் பெயர்குறிக்கப்பட்ட கணக்குக்கு பற்றுவைப்பதற்கு வங்கி அதிகாரமளிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், ஏதேனுமொரு நாளில் நிறைவேற்றப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்தத் தொகை, காலத்துக்குக்காலம் வங்கியினால் அட்டைவைத்திருப்பவருக்கு அறிவிக்கப்படவேணடிய அத்தகைய தொகைகளுக்கும் அத்தகைய வேறு நிபந்தனைகளினாலும் வரையறுக்கப்படுதல் வேண்டும்.

8. அட்டைவைத்திருப்பவருக்கு பிக்சல் டெபிட் அட்டையை வழங்குதல் வங்கியின் தனித்தற்றுணிபிலும் பிக்சல் டெபிட் அட்டையை பயன்படுத்துவதினூடாகச் செய்யப்பட்ட எல்லாக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் எல்லா நேரங்களிலும் பொறுப்பாகவிருக்கவேண்டிய அட்டைவைத்திருப்பவர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலரின் அபாயத்திலும் இருத்தல் வேண்டும். பிக்சல் டெபிட் அட்டை தொடக்கத்தில் அறுபது (60) மாத காலப்பகுதியொன்றுக்கு வழங்கப்படுவதுடன் வங்கியின் தனித்தற்றுணிபில் ஒவ்வொரு காலப்பகுதியினதும் முடிவில் புதுப்பிக்கப்படற்பாலதாதலும் வேண்டும். எவ்வாறாயினும், வங்கி, எந்நேரத்திலும் அட்டை வைத்திருப்பவருக்கான முன்னறிவித்தலுடன் பிக்சல் டெபிட் அட்டையை மீளப்பெறுதல், இரத்துச்செய்தல் அல்லது புதுப்பிக்க மறுத்தல் மூலம் பிக்சல் டெபிட் அட்டையை முடிவுறுத்துவதற்குச் சுதந்திரமுடையதாதல் வேண்டும்.

9. அட்டை வைத்திருப்பவர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர் எல்லா நேரங்களிலும், பிக்சல் டெபிட் அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் எவ்வகையினதுமாக செய்யப்பட்ட எவையேனும் கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பொறுப்பாதல் வேண்டுமென்பதுடன், பிக்சல் டெபிட் அட்டையின் ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத பயன்பாட்டினால் அல்லது தொடர்புபட்ட PIN இன் பயன்பாட்டினால் எவ்வகையினதுமாக விளைவிக்கப்பட்ட எல்லா இழப்புக்களுக்காகவும் / சேதங்களுக்காகவும் வங்கிக்கு நட்டோத்தரவாதமளித்தலும் வேண்டும்.

10. இந்த பிக்சல் டெபிட் அட்டை எந்த அட்டை வைத்திருப்பவருக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படுகின்றதோ அந்த அட்டை வைத்திருப்பவரினால் மட்டுமே அது பயன்படுத்தப்படுதல் வேணடுமென்பதுடன் பிக்சல் டெபிட் அட்டையில் வழங்கப்பட்ட இடத்தில் அவர் தனது கையொப்பத்தை இடுதலும் வேண்டும். அட்டை வைத்திருப்பவர் எல்லா நேரங்களிலும் பிக்சல் டெபிட் அட்டையின் இழப்பையும் / திருட்டையும் PIN பற்றி எவரேனும் அதிகாரமளிக்கப்படாத ஆள் அறியவருவதனையும் தடுப்பதற்கு இயன்றவெல்லாக் கவனத்தையும் பிரயோகித்தல் வேணடும். அட்டை வைத்திருப்பவர் அத்துடன் / அல்லது பெற்றோர் / பாதுகாவலர் இருவிடயங்களிலும் வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேணடும். இழப்பு / திருட்டு அல்லது PIN இன் அதிகாரமளிக்கப்படாத பயன்பாடு பற்றிய அறிவித்தல் பெறப்பட்டுள்ளதென அட்டை வைத்திருப்பவருக்கு வங்கி எழுத்தில் உறுதிப்படுத்தும் அத்தகைய காலம் வரை, பிக்சல் டெபிட் அட்டையின் பயன்பாடு மூலம் பயனுறுத்தப்பட்ட எல்லாக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் அட்டை வைத்திருப்பவர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர் முழுப்பொறுப்பையும் ஏற்றல் வேண்டும்.

11. அட்டை வைத்திருப்பவர் அட்டையை ஒழிப்பதற்கு விரும்புகின்ற பட்சத்தில், அத்தகைய அட்டை வைத்திருப்பவர் 7 நாட்களுக்குக் குறையாத எழுத்திலான முன்னறிவித்தலை வங்கிக்குக் வழங்குதல் வேண்டுமென்பதுடன் பிக்சல் டெபிட் அட்டையை உடனடியாக வங்கிக்குத் திருப்பிக்கொடுத்து, அதற்கான செல்லுபடியான பற்றுச்சீட்டைப் பெறுதலும் வேணடும்.

12. கணக்கு மூடிவிடப்படின், அட்டை வைத்திருப்பவர் இறப்பின் அல்லது பிக்சல் டெபிட் அட்டையைத் திருப்பித்தரும்படி அட்டை வைத்திருப்பவரை வங்கி தேவைப்படுத்தும் போதெல்லாம் வங்கியானது பிக்சல் டெபிட் அட்டையை மீளக்கோருவதற்கு / மீளப்பெறுவதற்கு உரித்துடையதாகும்.

13. பிக்சல் டெபிட் அட்டையின் இரத்துச்செய்தல் அல்லது மீளப்பெறுதல் பற்றிய ஏதேனும் அறிவிப்பு வங்கியினால் அல்லது வங்கியின் சார்பில் எவரேனுமாளினால் அட்டை வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்டுள்ள பின்னர் பிக்சல் டெபிட் அட்டையைப் பயன்படுத்தாது அல்லது பயன்படுத்த எத்தனிக்காது தவிர்ப்பதற்கு அட்டை வைத்திருப்பவர் பொறுப்பேற்கின்றார் என்பதுடன் வங்கியில் உள்ள கணக்கு எக்காரணத்துக்காகவும் மூடிவிடப்படின் அத்துடன் / அல்லது முடக்கப்படின், இரத்துச் செய்யப்படுவதற்காக பிக்சல் டெபிட் அட்டையைத் திருப்பிக்கொடுப்பதற்கும் பொறுப்பேற்கின்றார்.

14. மேற்படி வரையறை எவ்வாறிருப்பினும், பிக்சல் டெபிட் அட்டையினூடாக அல்லது வேறேதேனும் உள்நாட்டு வலையமைப்பினூடாக உள்நாட்டில் அல்லது சர்வதேசரீதியில் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான சட்டப்படியான அல்லது வேறு நியதிச்சட்ட முறையான விதிப்பனவுகளுட்பட, எல்லா விதிப்பனவுகளையும் அட்டை வைத்திருப்பவரின் பெயர்குறிக்கப்பட்ட கணக்குக்கு பற்று வைப்பதற்கு வங்கி அதிகாரமளிக்கப்படுகின்றது.

15. அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் செய்முறைப்படுத்தப்படும் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய வங்கியின் பதிவு 11 ஆம் மற்றும் 12 ஆம் வாசகங்களுக்கு அமைய எல்லா நோக்கங்களுக்காகவும் முடிவானதும் பிணிக்கப்பட்டதாதலும் வேண்டும்.

16. பிக்சல் டெபிட் அட்டையின் பயன்பாட்டின் மூலம் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் பதிவு, அட்டை வைத்திருப்பவர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலருக்கு அனுப்பப்பட்ட வழமையான வங்கிக்கூற்றுகளில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்; அவர் ஒவ்வொரு கூற்றையும் பரிசீலனை செய்து அதன்கண் ஏதேனும் சார்த்தப்பட்ட பிழை இருப்பின், அதனை அத்தகைய கூற்றுத்திகதியிலிருந்து 45 நாட்களினுள் வங்கிக்கு அறிவிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுவார். அத்தகைய

காலப்பகுதிக்குப் பின்னர் அதன்கண்ணுள்ள வங்கிக்கூற்றுகளும் பதிவுகளும் (அவ்வாறு அறிவிக்கப்பட்ட எவையேனும் பிழைகளைத் தவிர) எல்லா நோக்கங்களுக்காகவும் வங்கிக்கும் அட்டை வைத்திருப்பவருக்குமிடையே சரியானவையென முடிவானமுறையில் கருதப்படுதல் வேண்டும்.

17. அட்டை வைத்திருப்பவர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர் எஸ்எம்எஸ் மூலமான விழிப்பூட்டல்களைப் பெற்றுக்கொள்ளும் வசதியைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் வங்கியின் எஸ்எம்எஸ் மூலமான விழிப்பூட்டல்கள் வசதிக்கு ஏற்புடையனவான நியதிநிபந்தனைகள் பிக்சல் டெபிட் அட்டை உட்பட ஏதேனும் வழி மூலம் வங்கியில் வைத்திருக்கப்படும் அட்டை வைத்திருப்பவரின் கணக்கினூடாக பயனுறுத்தப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும். அத்தகைய வசதியைப் பயன்படுத்துவதானது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் பணிப்புரைகள் / ஒழுங்குவிதிகளின் நியதிகளின் படி செல்லுபடியானதும் பிணிக்கப்பட்டதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

18. பின்வருவனவற்றுக்கான பொறுப்பு எதனையும் வங்கி ஏற்பதில்லை:

(அ) பிக்சல் டெபிட் அட்டைக்கு மதிப்பளிப்பதற்கும் அல்லது அதனை ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது முழுமையான அதிகாரமளிக்கப்பட்ட வரையறைக்கு வசதிகளை நீடிப்பதற்கும் ஏதேனும் வணிகத் தாபனத்தின் மறுப்பு அல்லது தவறுகை.

(ஆ) பிக்சல் டெபிட் அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது பெறப்பட்ட பண்டங்களிலான மற்றும் சேவைகளிலான ஏதேனும் குறைபாடு அல்லது குறைவுபாடு.

(இ) பிக்சல் டெபிட் அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது சேவைகளைப் பெறுவதற்கு அட்டை வைத்திருப்பவர் எந்த விளம்பரப்படுத்துதல், பிரசித்த அல்லது மேம்படுத்துகை விடயத்தினால் உந்தப்பட்டாரோ அல்லது ஊக்குவிக்கப்பட்டாரோ அந்த ஏதேனும் விளம்பரப்படுத்துதல், பிரசித்த அல்லது மேம்படுத்துகை விடயத்தில் செய்யப்பட்ட அல்லது அடங்கியுள்ள ஏதேனும் செம்மையற்ற முறையீடுகள்.

(ஈ) ஏதேனும் தொடர்பாடல் முறைமை அல்லது வசதிகள் அல்லது தரவுச் செய்முறை முறைமை அல்லது அனுப்புகை இணைப்பிலான ஏதேனும் குலைவு அல்லது தவறுகை அல்லது குறைபாடு காரணமாக அல்லது அதிலிருநது எழுகின்ற எத்தன்மையினதுமான ஏதேனும் வசதியீனம், இழப்பு, சேதம் அல்லது தடுமாற்றம் அல்லது வேறு கைத்தொழில் அல்லது வேறு பிணக்கு அல்லது வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட அல்லது வேறுவகையான வேறேதேனும் காரணம்.

19. அட்டை வைத்திருப்பவர், எல்லா நேரங்களிலும், பிக்சல் டெபிட் அட்டையின் பயன்பாட்டினாலான எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பின்வருவனவற்றுக்காகும் என உறுதிப்படுத்துதல் வேண்டும்:

(அ) உள்நாட்டு நாணயத்தில் சொந்தச் செலவுகளுக்காகவிருத்தல்; அத்துடன்

(ஆ) சட்ட நோக்கங்களுக்காகவிருத்தல். மூன்றாந் திறத்தவர்கள் சார்பில் வெளியகக் கொடுப்பனவுகள், உள்நாட்டுச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளின் மீறுகையாக உள்ளனவெனக் கவனிக்கப்படலாம்.

20. வங்கி தோதானதெனக் கருதக்கூடிய ஏதேனும் முறையில் காலத்துக்குக்காலம் நியதிநிபந்தனைகளை மாற்றியமைப்பதற்கான, வேறுபடுத்துவதற்கான, மாற்றுவதற்கான, மீளப்பெறுவதற்கான, புதுப்பிப்பதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. அட்டை வைத்திருப்பவருக்கான அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய மாற்றியமைத்தல் பயனுறும் திகதிக்குப்பின்னர் பிக்சல் அட்டையைப் பயன்படுத்துவதன் மேல் அத்தகைய மாற்றியமைத்தலை அட்டைவைத்திருப்பவர் தனி ஒதுக்கீடின்றி ஏற்றுக்கொண்டுள்ளாரெனக் கருதப்படுவார் அத்தகைய மாற்றியமைத்தலை அட்டை வைத்திருப்பவர் ஏற்காவிடின், பிக்சல் டெபிட் அட்டை வங்கிக்குத் திருப்பிக்கொடுக்கப்பட்டு அதற்காகச் செல்லுபடியான பற்றுச்சீட்டு பெறப்படுதல் வேண்டும்.

21. இவ்விண்ணப்பமும் நியதிநிபந்தனைகளும் இலங்கைச் சட்டங்களினால் ஆளப்பட்டு அவற்றுக்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

22. தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலமான அறிவுறுத்தல்களுக்கான அதிகாரவளிப்பு மற்றும் நட்டோத்தரவாதம்

(அ) அட்டை வைத்திருப்பவர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர், அறிவுறுத்தல்களை வழங்கும் அல்லது வழங்குவதாக கொள்ளப்படும் ஆளின் அதிகாரம் அல்லது ஆளடையாளம் பற்றி, முற்போந்தவற்றின் பொதுமைக்குப் பங்கமின்றி உட்பட வங்கியின் பாலான விசாரணை எதுவுமின்றி மற்றும் அறிவுறுத்தல்களைப் பெறும் நேரத்தில் நிலவுகின்ற சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் அட்டை வைத்திருப்பவரினால் (வைத்திருப்பவர்களினால்) அவர் (அவர்கள்) சார்பாக தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலம் காலத்துக்குக்காலம் வழங்கப்படக்கூடிய அல்லது வழங்கப்படுவதாக கருதப்படக்கூடிய ஏதேனும் அறிவித்தல், அறிவுறுத்தல், கோரிக்கை அல்லது வேறு தொடர்பாடல் ("அறிவுறுத்தல்கள்") மீது நம்பியிருப்பதற்கும் அவற்றுக்கு இணங்க செயலாற்றுவதற்கும் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றனர். அட்டை வைத்திருப்பவர், மின்னஞ்சலுக்கான பெறுகை நேரம் மற்றும் திகதி மீதான சட்ட விதிப்பு அறிவுறுத்தல்களின் அனுப்புகைத் திகதிகளில் மட்டுமானது என்பதை இறுதியானதாக ஏற்றுக்கொள்கின்றார்.

(ஆ) அறிவுறுத்தல் பணம் செலுத்துவதற்காகவிருப்பினுஞ்சரி அல்லது வேறு வகையாக ஏதேனும் கணக்குக்கு பற்றுவைப்பதற்காகவிருப்பினுஞ்சரி அல்லது வரவு வைப்பதற்காகவிருப்பினுஞ்சரி அல்லது ஏதேனும் பணம் அல்லது ஆவணங்களின் கையுதிர்ப்புடன் தொடர்புபடுவதாகவிருப்பினுஞ்சரி அல்லது வங்கியுடன் அல்லது வேறு எவரேனும் ஆளுடனான ஏதேனும் உடன்படிக்கைக்கு அல்லது வேறு ஒழுங்கேற்பாட்டுக்கு அட்டைவைத்திருப்பவர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலரை பிணிப்பதாக கருதப்படுவதாயினுஞ்சரி அல்லது கொடுக்கல்வாங்கல் அல்லது ஒழுங்கேற்பாட்டின் தன்மையை அல்லது சம்பந்தப்பட்ட பணத்தொகையை பொருட்படுத்தாமல் எத்தகையதுமான ஏதேனும் வேறு வகையினதான கொடுக்கல்வாங்கல் அல்லது ஒழுங்கேற்பாட்டுக்கு அட்டை வைத்திருப்பவரை அல்லது பெற்றோர் / பாதுகாவலரை பொறுப்பாக்குவதற்காகவிருப்பினுஞ்சரி மற்றும் அறிவுறுத்தல்களின் நியதிகளில் ஏதேனும் பிழை, ஒத்திசைவின்மை, பிழையாகப் புரிந்து கொள்ளல் அல்லது தெளிவின்மை எவ்வாறிருப்பினும் அறிவுறுத்தல்கள் முழுமையாக அதிகாரமளிக்கப்பட்டனவாகவும் அட்டைவைத்திருப்பவர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர் மீது பிணிக்கப்பட்டதாகவும் கருதுவதற்கு வங்கி உரித்துடையதாதல் வேண்டும் என்பதுடன் வங்கி தோதானதென கருதக்கூடியவாறு அறிவுறுத்தல்கள் சம்பந்தமாக அல்லது அவற்றின் மீது நம்பியிருந்து அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்கு வங்கி உரித்துடையதாதலும் வேண்டும்.

(இ) வங்கியானது இவ்வதிகாரவளிப்பு மற்றும் நட்டோத்தரவாதத்தின் நியதிகளுக்கிணங்க செயலாற்றுவதன் பிரதிபயனாக, அறிவுறுத்தல்கள் அல்லது அவற்றின் ஏதேனும் மீறுகை அல்லது இதன்கண் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு வங்கியின் உரிமைகளை வலுவுறுத்துவதிலிருந்து அல்லது அவை சம்பந்தமாக எவ்வகையினதுமாக எழுகின்ற மற்றும் எத்தகையதுமான தன்மையிலான சட்டரீதியாக அல்லது வேறு வகையாக வங்கியினால் ஏற்கநேர்ந்த அல்லது அடையப்பட்ட இழப்புக்கள், உரிமைக்கோரிக்கைகள், வழக்குகள், வழக்குநடவடிக்கைகள், கோரிக்கைகள், சேதங்கள், ஆகுசெலவுகள் பொறுப்பு மற்றும் செலவுகள் எல்லாவற்றுக்கும் எதிராக வங்கிக்கு நட்டோத்தரவாதமளிப்பதற்கும் வங்கியை நட்டோத்தரவாதமளிக்கப்பட்டதாக வைத்திருப்பதற்கும் அட்டை வைத்திருப்பவர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர் இத்தால் இல்லாதொழிக்கமுடியாத வகையில் பொறுப்பேற்கின்றார். அவை தொடர்பிலான எல்லா ஆகுசெலவுகளும் செலவுகளும் கணக்குக்கு வரவுவைக்கப்படலாம் என்பதுடன் அட்டை வைத்திருப்பவர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலரினால் செலுத்தப்படற்பாலதாதலும் வேண்டும்.

(ஈ) முடிவுறுத்துகை அறிவித்தலைப் பெறுவதற்கு முன்னர் இவ்வதிகாரவளிப்பு மற்றும் நட்டோத்தரவாதத்தின் நியதிகளுக்கு இணங்க புரியப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் இவ்வதிகாரவளிப்பு மற்றும் நட்டோத்தரவாதத்தின் கீழ் ஏதேனும் பொறுப்பிலிருந்து அட்டை வைத்திருப்பவரை அல்லது பெற்றோர் / பாதுகாவலரை அத்தகைய முடிவுறுத்துகை விடுவிக்காது என்பது தவிர, இவ்வதிகாரவளிப்பு மற்றும் நட்டோத்தரவாதத்தின் நியதிகள், வங்கி அட்டை வைத்திருப்பவரிடமிருந்து அத்தகைய அறிவித்தலைப் பெற்று அதன் மீது செயலாற்றுவதற்கு நியாயமான நேரத்தைக் கொண்டிருந்தாலொழியவும் கொண்டிருக்கும் வரையும் முழு வலுவிலும் பயனிலும் இருத்தல் வேண்டும்.

(உ) மேற்கூறப்பட்டவாறு தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலம் எவையேனும் அறிவுறுத்தல்களை வழங்குதல் வங்கிக்கு அறிவுறுத்தல்களை வழங்கும் பாதுகாப்பான வழிகள் அல்லவெனவும் அது தொடர்பில் சம்பந்தப்பட்டுள்ள அபாயங்களை அட்டைவைத்திருப்பவர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர் அறிகின்றனர் எனவும் அட்டைவைத்திருப்பவர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர் ஏற்றுக்கொண்டு ஒப்புக்கொள்கின்றனர் என்பதுடன் அட்டை வைத்திருப்பவரின் வசதிக்குச் செய்யப்படுகின்ற இதன்கண் உள்ள ஒழுங்கேற்பாடுகள் முழுமையாக அட்டைவைத்திருப்பவர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலரின் அபாயத்தில் உள்ளன எனவும் உறுதிப்படுத்துகின்றனர்.

23. அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அட்டை வைத்திருப்பவரிடமிருந்து தோற்றுவிக்கப்படவில்லை என வங்கி அதன் தனித் தற்றுணிபில் நம்பினால், அட்டை வைத்திருப்பவரினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவதற்கு வங்கி பிணிக்கப்படுவதில்லை.

## NDB பராயமடையாதோருக்கான சேமிப்புத் திட்டம்

1. பராயமடையாதோருக்கான சேமிப்புத் திட்டம் பெற்றோர் / பாதுகாவலர் மற்றும் பராயமடையாதவருக்கும் (கணக்கு வைத்திருப்பவர்) இடையில் கூட்டாக திறக்கப்படும்.

2. சான்றிதழ் பெற்றோர் / பாதுகாவலர் மற்றும் பராயமடையாதவரின் பெயர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. ஒவ்வொரு NDB பராயமடையாதோருக்கான சேமிப்புத்திட்டக் கணக்கும், ஒன்றில் முதலாவது மாதாந்த தவணைக் கொடுப்பனவு அல்லது ஒட்டுமொத்தத் தொகை வைப்பொன்றுடன் சேர்ந்து முதலாவது மாதாந்த தவணைக் கொடுப்பனவைக் கொண்ட ஆரம்ப வைப்பொன்றின் மீது திறக்கப்பட்டு NDB பராயமடையாதோருக்கான சேமிப்புத் திட்டச் சான்றிதழொன்று வழங்கப்படும். அத்தகைய சான்றிதழ் கணக்கு வைத்திருப்பவரினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்; அதன் பாதுகாப்பு கணக்கு வைத்திருப்பவரின் பொறுப்பாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் முதிர்வின் போது அச்சான்றிதழை ஒப்படைப்பது கட்டாயமாதலும் வேண்டும். NDB பராயமடையாதோருக்கான சேமிப்புத் திட்டச் சான்றிதழ் காணாமல் போனால், திருடப்பட்டால் அல்லது இடந்தவறி வைக்கப்பட்டால் கணக்கு வைத்திருப்பவர் அது பற்றி உடனடியாக வங்கிக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் வங்கியானது, ஒரு செல்லுபடியான சத்தியக்கடதாசி பெறப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படத்தக்க விளக்கமொன்றின் மீது ஒரு புதிய இணைப்பிரதிச் சான்றிதழொன்றையும் வழங்கலாம்.

4. முதிர்வின் போது, NDB பராயமடையாதோருக்கான சேமிப்புத் திட்டச் சான்றிதழை சமர்ப்பிப்பதன் மேல், கணக்குக்கு வரவுக்கு இருக்கும் பணங்கள் கணக்கு வைத்திருப்பவரினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் படி கையாளப்படுதல் வேண்டும். கணக்கு வைத்திருப்பவருக்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள செலுத்துகை விருப்பத் தெரிவுகள் பின்வருவனவற்றுக்காகவிருத்தல் வேண்டும்,

(அ) கணக்கு வைத்திருப்பவரின் NDB கணக்குக்கு நிதிகளைப் பரிமாற்றுவதற்கும் (நிதிகள் பராயமடையாதவரின் பெயரில் பேணப்படும் கணக்கொன்றுக்கு பரிமாற்றப்படுதல் வேண்டும்.)

5. நாளின் இறுதியில் கணக்குக்கு வட்டி வரவு வைக்கப்படுவதால், முதிர்வுத்

திகதியின் பின்னர் அடுத்த நாளன்று NDB வங்கியில் பேணப்படும் பராயமடையாதவர் கணக்குக்கு முதிர்வுப் பெறுமதி வரவுக்கு வைக்கப்படும்.

6. வங்கியின் வேறு எவையேனும் நியதிநிபந்தனைகளில் அடங்கியுள்ளவைக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், NDB பராயமடையாதோருக்கான சேமிப்புத் திட்டக் கணக்குக்கான கணக்கின் வங்கிக்கூற்று, கணக்கு வைத்திருப்பவரினால் வங்கிக்கு கடைசியாக உறுதிப்படுத்தப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு காலாண்டுக்கு ஒரு முறை கணக்கு வைத்திருப்பவரின் பெற்றோர் / பாதுகாவலருக்கு மின்னஞ்சலில் அனுப்பப்படும்.

7. கணக்கு வைத்திருப்பவர், மாதாந்த வங்கிக்கூற்றுக்களைப் பெறுவதற்கு தெரிவுசெய்துள்ள பட்சத்தில், அது பெற்றோர் / பாதுகாவலருக்கு மாதாந்தம் மின்னஞ்சலில் அனுப்பப்படும்.

8. மாதாந்த தவணைக் கட்டணத்துக்குரிய திகதி தொடக்க வைப்புத் திகதிக்குப் பின்னர் ஒரு (01) மாதமாகவிருக்கும்.

9. மாதாந்த தவணைக் கொடுப்பனவு தவணைக் கொடுப்பனவுக்குரிய திகதியில் செலுத்தப்படுகின்றது என உறுதிப்படுத்துவது கணக்கு வைத்திருப்பவரின் பொறுப்பாதல் வேண்டும். தவணைக் கொடுப்பனவுகள் தவணைக் கொடுப்பனவுக்குரிய திகதியில் பெறப்படாவிடின் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட சேமிப்புப் பெறுமதிக்கு கணக்கு வைத்திருப்பவர் உரித்துடையவராதலாகாது.

10. காசோலைகள், வரைவுகள் இக் கணக்கின் வரவுக்குப் பெற்றுக்கொள்ளப்படுதலாகாது.

11. பெற்றோர் / பாதுகாவலரின் இறப்பு, பங்களிப்புக் காலப்பகுதியின் போது இடம்பெறின், பராயமடையாதோருக்கான சேமிப்புத் திட்டக் கணக்கு முடிவுறுத்தப்படும். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில், இறக்கின்ற நேரம் வரை வைப்பிலிடப்பட்ட உதவுதொகைகள், அவற்றின் மீது ஏற்புடையனவான எவையேனும் நியதிச்சட்ட வரிகள் மற்றும் அறவீடுகளுக்கு எவ்வாறாயினும் அமையவும் எவையேனும் தண்ட விதிப்பனவுகள் இன்றி திரண்ட வட்டியுடன் சேர்த்து நியமத்தருக்குச் செலுத்தப்படும்.

அத்தகைய பெயர்நியமனம் இல்லாதபோது அத்தகைய வைப்பின் வழங்குகை இலங்கையின் நிலவுகின்ற சட்டங்களுக்கு இணங்க செய்யப்படுதல் வேண்டும்.

12. கணக்குவைத்திருப்பவர் நிலவுகின்ற பிடித்துவைத்தல் வரி (WHT) சட்டங்களுக்கு அமைந்தவராக இல்லாத பட்சத்தில், அத்தகைய கணக்குவைத்திருப்பவர் முதிர்வுக் காலப்பகுதியின் போது உடன்பட்டுக்கொள்ளப்பட்ட இலக்குத் தொகைக்கு தகைமையுடையவராவார். கணக்குவைத்திருப்பவர் நிலவுகின்ற WHT கழிவுகளுக்கு அமைந்தவராகவிருப்பின், மாதாந்த தவணைக்கொடுப்பனவுகள் WHT கழிவுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும் என்பதுடன் முதிர்வின்போதான இறுதி இலக்குத் தொகை அத்தகைய கழிவுகளுக்கு அமைந்ததாதலும் வேண்டும்.

13. மீளப்பெறுகைகள் எவையும் முதிர்வுத் திகதி வரை NDB பராயமடையாதோருக்கான சேமிப்புத் திட்டக் கணக்கிலிருந்து அனுமதிக்கப்படுதலாகாது. கணக்கு வைத்திருப்பவரினால் கோரிக்கையொன்று செய்யப்படுவதன் மேல், வங்கியானது அதன் தனித் தற்றுணிபில், தண்ட வீதமொன்றுக்கு அமைய முதிர்வுக்கு முன்னரான மீளப்பெறுகையொன்றுக்கு அனுமதிக்கலாம்.

14. கணக்கு வைத்திருப்பவர் மாதாந்த தவணைக்கொடுப்பனவைச் செலுத்தாத பட்சத்தில் அத்துடன் / அல்லது கொடுப்பனவை நிறுத்துகின்ற பட்சத்தில், சேமிப்புத் திட்டக் கணக்குக்கு ஏற்புடையதான வட்டிவீதம் வங்கியின் தனித்தற்றுணிபில் தீர்மானிக்கப்படும்.

15. வங்கியானது உடன்பட்டுக்கொள்ளப்பட்ட சேமிப்புப் பெறுமதியின் கொடுப்பனவுக்கு உத்தரவாதமளிக்கின்றது. ஆயின், எல்லா மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளும் மேலதிக கொடுப்பனவுகளுடன் (எவையேனும் இருப்பின்) சேர்த்தும் வங்கியினால் கணக்கு வைத்தருப்பவருக்கு கொடுப்பனவு செய்யும் நேரத்தில் நிலவுகின்ற எவையேனும் நியதிச்சட்ட வரிகள் மற்றும் அறவீடுகளுக்கு அமையவும் தவணைக் கொடுப்பனவுக்குரிய திகதிகளில் செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

16. கணக்கு வைத்திருப்பவர், ஒட்டுமொத்த வைப்பு அல்லது மாதாந்த தவணைக்கொடுப்பனவுத் தொகைக்கு மேலாக மேலதிக கொடுப்பனவுகளை கணக்குக்குச் செய்திருப்பின் முதிர்வின் போது வட்டிவீதத்தை தீர்மானிப்பதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

17. கணக்கு வைத்திருப்பவர்கள், பெற்றோர் / பாதுகாவலரின் பெயரில் பற்று வைக்கப்படும் கணக்கொன்றை பெயர்குறித்தல் வேண்டும்.

18. முதிர்வின் மேல், கணக்கு வைத்திருப்பவர் கணக்கை மூடிவிடுவதற்கு வங்கிக்கு எழுத்திலான அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும்.